# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.
## S.C. NO. 159/2019
## PW12

| | | |
|---|---|---|
| Name | : | சிவசங்கர் |
| Father's/Husband's Name | : | ராஜன் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.12.2024.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவண்ணாமலை மேற்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 10.06.2018 ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் திருவண்ணாமலை கிராமிய காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது வேலாயுதம் கொட்டாவை சேர்ந்த சாரதா வயது 40 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் நிலைய குற்ற எண்.910/2018 U/s 294 (b) ,302 IPC ல் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 9. அதன் அசலை திருவண்ணாமலை நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றத்திற்கும் , மற்ற நகலை மற்ற அதிகாரிகளுக்கும் அனுப்பி ்வைத்தேன். கோப்பை ஆய்வாளர் பார்வைக்கு அனுப்பி வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் பெற்றதாக சொல்லப்படும் புகாரில் 2ம் எதிரி (இளம்சிறார் ) எத்தனை மணிக்கு கலப்பையை எடுத்துச்சென்றார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அன்று இரவு கலப்பையை பற்றி புகார்தாரரின் கணவர் கேட்டதாக புகாரில் இல்லை என்றால் சரிதான். இறந்த நபர் மரக்கட்டையால் தாக்கியதாக இல்லை என்று சொன்னால் மரத்தடியால் தாக்கப்பட்டதாக உள்ளது. புகாரில் இறந்த நபரின் வாயிலும், மூக்கிலும் ரத்தம் வந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் புகார்தாரரின் உறவினர்கள் இருந்ததாக புகாரில் இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரரின் மகள்கள் நிரோஷா, நிஷா மற்றும் பக்கத்து நிலத்துக்காரர்கள் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது.ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது எனது வாக்குமூலத்தை பதிவுசெய்தாரா என்றால் பதிவுசெய்தார். நான் சொல்வது பொய் என்றும் என்னை ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்திருந்தால் நீதிமன்றத்திற்கு அது அனுப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்பதும் அது பொய்யாக கொடுக்கப்ப்ட்ட புகாரை பெற்று எதிரி மீது வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/- B.C. Gopinath., M.L.,
Additional District Judge,
Tiruvannamalai.